முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 10,000 முகாம்கள் நிறைவு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், தென்பெண்ணை ஆற்றை செய்யாற்றின் வழியே பாலாற்றில் இணைத்து நந்தன் கால்வாய்க்கு பாசன வசதி அளித்திட ரூ.42.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததற்காக விழுப்புரம் மாவட்ட விவசாய சங்க பிரிதிநிதிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

சேலம் மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய தொகுதிகளில்

‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை!

கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி சிறப்புரை!

சேலம், பிப்.5-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, 05.02.2026 மற்றும் 06.02.2026 ஆகிய நாட்களில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சேலம்ம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சேலம் மேற்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய சட்ட மன்றத் தொகுதிகளில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றார்.

அதன் விபரம் வருமாறு:

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்ற;பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரையை 05.02.2026 மற்றும் 06.02.2026 ஆகிய நாட்களில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சேலம் மேற்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய சட்ட மன்றத் தொகுதிகளில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டம், கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல், தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தல் மற்றும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்க விருக்கின்றார். இதற்கான ஏற்பாட்டை சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும், சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சருமான இரா.ராஜேந்திரன் செய்து வருகின்றார்.

05.02.2026, வியாழக்கிழமை

- சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி

ஓமலூர் பேருந்து நிலையம் - தலைவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல்

முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு - மாநகராட்சி தொங்கும் பூங்கா மண்டபம்

“தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரைக் கூட்டம் - பொன்னம்மாப்பேட்டை

முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு - ஜி.வி.என். திருமண மண்டபம், திருவாகவுண்டனூர்

“தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரைக் கூட்டம் - முத்துநாயக்கன்பட்டி, அரசினர் பள்ளி அருகில்

06.02.2026, வெள்ளிக்கிழமை

- சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி

சேலம் மாநகரம் - தலைவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல்

முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு - மாநகராட்சி தொங்கும் பூங்கா மண்டபம்

“தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரைக் கூட்டம் - பொன்னம்மாப்பேட்டை

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் 10,000 முகாம்கள் நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இவ்விழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணிவேந்தன், முன்னாள் அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் இலட்சுமணன், அன்னியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் ரூ.1000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல் பிப் 5

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட ரூ.1000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

இது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் செய்தியாளர்களிடம் கூறும்போது,

2021ஆம் ஆண்டு திராவிட மாடல் அரசு அமைந்ததுடன், நாமக்கல் மாவட்டத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர் திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு பணிகளை நிறைவேற்ற வேண்டும் என மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் முதல்வர் மு.க ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அந்த கோரிக்கையின் அடிப்படையில் கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது.

ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம்

இதன் ஒரு பகுதியாக இன்று நாமக்கல் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ரூ.1000 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுகின்றன. இதில் முக்கியமாக நான்கு முக்கிய திட்டங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம்: ரூ.854 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ள ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. இந்த திட்டம் மூலம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதி, வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், நாமக்கல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுச்சத்திரம் ஒன்றியம் புதுச்சத்திரம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்கள் பயனடைகின்றன.

மேலும் வெண்ணந்தூர், அத்தனூர், பிள்ளாநல்லூர், பட்டணம், புதுப்பட்டி, சீனாப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, மல்லசமுத்திரம் ஆகிய எட்டு பேரூராட்சிகளும், ராசிபுரம் நகராட்சியும் இந்த திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி பெறுகின்றன.

இந்த திட்டத்தின் மூலம் 523 ஊரக குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெறுகின்றன. பேரூராட்சி பகுதிகளில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 135 லிட்டர், ஊராட்சி பகுதிகளில் 55 லிட்டர் குடிநீர் வழங்கப்படும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதிநவீன பால்பண்ணை

நாமக்கல் அதிநவீன பால்பண்ணை:

ரூ.100 கோடி மதிப்பில் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அதிநவீன பால்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு, இங்குள்ள பால் உற்பத்தியாளர்கள் பாலை சேலத்திற்கு அனுப்பி வர வேண்டிய நிலை இருந்து வந்தது. இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டது. இந்த நிலையை மாற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அதிநவீன பால்பண்ணை இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து, பாக்கெட்டிங் செய்து, மதிப்பூட்டப்பட்ட உபப்பொருட்களாக மாற்றி விற்பனை செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பால் உற்பத்தியாளர்கள் நல்ல விலை பெறுவதுடன், கிராமப்புற பொருளாதாரமும் வலுப்பெறும்.

மோகனூர் பேரூராட்சி தனி குடிநீர் திட்டம்:

காவிரி கரையோரத்தில் அமைந்துள்ள மோகனூர் பேரூராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்க ரூ.23 கோடி மதிப்பில் தனி குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த பணிகள் தற்போது நிறைவடைந்து, இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. இதன் மூலம் மோகனூர் பேரூராட்சியில் குடிநீர் பிரச்சனை முழுமையாக தீர்க்கப்படும்.

போதமலை – புதுப்பட்டி சாலை திட்டம்:

ராசிபுரம் அருகே உள்ள போதமலை பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற அனுமதி பெற்று ரூ.140 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு கட்டங்களாக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதில் ஒரு பகுதியாக புதுப்பட்டியில் இருந்து கடமலை வரை சுமார் 10 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூ.34 கோடி செலவில் சாலை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த சாலை திறப்பு விழா ராசிபுரம் அருகேயுள்ள புதுப்பட்டி பேரூராட்சி பகுதியில் நடைபெறுகிறது.

கடமலை சாலை திறப்பு விழா பிப்ரவரி 6 ஆம் தேதி நடைபெற உள்ளது. மேலும் பிப்ரவரி 13ஆம் தேதி மறைந்த தலைவர் சுப்பராயன் நினைவாக கட்டப்பட்ட மணிமண்டபமும் திறந்து வைக்கப்பட உள்ளது இந்த திட்டங்கள் அனைத்தும் நடப்பு ஆட்சி காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி பேசினார்